REGD. No. M. 6311

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 221

PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்	
உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: மாசி 16உ சனி (27—2—54) ★ ★ ★ வெளியூர்: மாசி 17உ ஞாயிறு (28—2—54)

3 வருடத்தில் 10,844 ஆசிரியர்கள் வேலை இழப்பார்கள்!

—— (:) ——

புதிய திட்டத்தால் மலபார் மாவட்ட ஆசிரியர்கள் பெறப்போகும் பேறு!

——:o:——

பாருலேகர் சிபார்சின் விளைவு வீண் பணச் செலவே!

——(;)——

சிறுூர் கல்விக்கு சி. ஆர். வைத்த வேட்டு: மலபார் ஆசிரியர் தூதுக்குழு விளக்கம்

சென்னை, பிப். 26—

"பாருலேகர் நிபுணர் குழு சிபார்சை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென சர்க்கார் கல்வி அதிகாரிகள் போட்டுள்ள உத்திரவின்படி, பெரும்பாலான ஆரம்ப ஆசிரியர்கள் வேலையை விட்டுத் தொலைந்து போக வேண்டிய கட்டாயம் ஏற்படும்.'

"சர்க்காரிலிருந்து மானியம் பெற அருகதையுடைய ஆசிரியர்கள் இப்பொழுது 20 மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தருகின்றனர். அந்தத் தொகை தொடர்ந்தாற் போல் ஒவ்வொரு ஆண்டும் 30, 40, 50 என்ற முறையில், 1954, '55 '56 ஆண்டுகளுக்குக் கூட்டப்பட வேண்டும் என்று சர்க்கார் உத்திரவு குறிப்பிடுகிறது."

"இதன் விளைவாக 1954-ல் ஆசிரியர் தொகை 18,036 ஆகவும், 1955-ல் 13,526 ஆகவும், 1956-ல் 10,821 ஆகவும் குறைந்துபோக இடமேற்படும். அதாவது, முதல் ஆண்டில் 3 609, இரண்டாம் ஆண்டில் 4 509, மூன்றும் ஆண்டில் 2,706 என்ற எண்ணிக்கையில் ஆசிரியர்கள் வேலையிழக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

சென்னைக்கு வந்த முதல் மந்திரி ராஜகோபாலாச்சாரியாரையும், கல்வி மந்திரி சுப்ரமணியத்தையும், சட்ட மந்திரி குட்டி கிருஷ்ண நாயரையும் நேரில் சந்தித்து, மனு ஒன்று கொடுத்து விஷயத்தையும் விளக்கிக் கூறினர், மலபார் மாவட்ட தொடக்கப் பள்ளி ஆசிரியர் சங்கச் சார்பினர். அவர்கள் கொடுத்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளதில் சில மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது அம்மனுவில் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

மேற்குறித்தவாறு ஆசிரியர் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் 1954 ஜூன் முதல் ஆரம்பமாகும். இதைத் தடுப்பதற்கான கட்டுப்பாட்டை உடனே சர்க்கார் மேற்கொள்ள வேண்டும். சர்க்கார் உதவி பெறும் வள்ளுவ நாடு தொடக்கப் பள்ளிகளின் நிர்வாகக் குழு, புதிய திட்டத்தை அமுல் செய்வதின் பலனாக மிதமிஞ்சிப் போகும் ஆசிரியர்களுக்கு மூன்றுமாத வெளியேற்ற அறிக்கைக் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருப்பதாகத் தெரிய வருகிறது.

பாருலேகர் செய்துள்ள சிபார்சுகள் பல, மேலும் செலவைப் பெருக்குமேயல்லாது கல்வித் துறையில் கணிசமான முன்னேற்றத்தை உண்டாக்காது. இதற்கு எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமானால் மேல் பல பெட்டி. இன்ஸ்பெக்டர்களை நிய

(4-ம் பக்கம் பார்க்க)

மக்களாட்சியில் ஏழை மாணவர்கள் கதி?

சென்னை, பிப். 26—

சென்னை தக்கர் பாபா வித்தியாலயத்தைச் சேர்ந்த 144 ஏழை மாணவர்கள் பள்ளிக்கூட நிர்வாகிகளால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வழக்கமாகத் தரப்பட்டு வந்த உணவு உடைகளைத் தரும்படி வற்புறுத்தியதற்காக சாப்பாடு போட மறுக்கப்பட்டது. நேற்று பிற்பகல் அவர்கள் ஹாஸ்டலை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

தக்கர் பாபா வித்தியாலயம் ஏழைகளுக்காக நடத்தப்படுவதேயாகும். இதன் நிர்வாகி காங்கிரஸ்காரர் என்று சொல்லப்படுகிறது.

சென்னை, பிப். 26—

எம். ஆர். ராதாவின் "ஆயுள் தண்டனை" என்ற நாடகத்தை சென்னை சர்க்கார் தடைசெய்து உத்தரவிட்டுள்ளனர்.

புகளூர் ஆலையில் நீக்கப்பட்ட எல்லா தொழிலாளரையும் சேர்க்கக் கோரிக்கை

வெற்றி காண உண்ணாநோன்பு இருப்பதென செயலாளர் உறுதி

புகளூர், பிப். 26—

புகளூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளரான தோழர் ஜி. ராமய்யா அவர்கள் மேற்படி சங்கத்தின் கோரிக்கைகள் 3—3—54-க் தேதிக்குள் நிறைவேற்றப்படாவிட்டால் 4—3—54 முதல் தாம் உண்ணாநோன்பிருக்க நேரிடுமென ஆலை நிர்வாகிகளுக்கும், சென்னை அரசியலாருக்கும் அறிவிப்புக் கடிதங்கள் அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

சர்க்கரை ஆலைக்கு மூலப்பொருளான கரும்பை, விவசாயிகள் தர மறுப்பதாகக் காரணங் காட்டி, 1953ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மூடப்பட்ட ஆலையானது மீண்டும் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் இறங்கியிருந்ததை அண்மையில் "நம் நாடு" இதழில் வெளியான செய்தியிலிருந்து வாசகர்கள் அறிந்திருக்கலாம். மார்ச் முதல் வாரில், ஆலை, கரும்பு பிழியும் என்று தெரியவருகிறது.

ஆனால், இதுவரை சுமார் 150 தொழிலாளர்கள் மட்டுமே வேலைக்கு எடுக்கப்பட்டுள்ளார்கள். ஆலையின் மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கை 675 ஆகும்.

தோழர் ஜி ராமையா அவர்களால் எழுதப்பட்டுள்ள அறிவிப்புக் கடிதத்தில் ஆலை நிர்வாகம் 1948ம் ஆண்டின் தொழில் கோர்ட் தீர்ப்பை உதாசீனப் படுத்துவதாக ஆலை நிர்வாகத்தின் மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில், குறிப்பிட்டிருப்பதாவது:—

"எல்லா தொழிலாளர்களையும் உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்; 1948-ம் ஆண்டு தொழில் கோர்ட் தீர்ப்பில் கண்டுள்ள எல்லா வசதிகளையும் வேலைக்கு எடுக்கப்பட்ட தேதியிலிருந்தே அளிக்கப்பட வேண்டும்," என்ற சங்கத்தின் தீர்மானத்தை வலியுறுத்தியுள்ளார்.

தமது உண்ணாநோன்பு அறிவிப்பை சம்மந்தப்பட்ட எல்லோருக்கும் 24—2—54ம் தேதியே அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது. (ந. நி.)

பாரிஸ், பிப். 27—

உலகிலேயே வேகமாகச் செல்லும் ரயில் பிரான்சில் தான் உள்ளது இந்த மின்சார ரயில் மணிக்கு 137.9 மைல் செல்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு வகையில்லை! மக்கள் வாழ்க்கைத்தர உயர்வுக்கு மார்க்கமில்லை!

—— (:) ——

★

வருமானங்கள்

மத்திய செலவில் பங்கு	1,79,46,000
வருமானங்கள் மீது வரி	5,58,11,000
நில வரி	5,95,00,000
கலால்	21,04,000
ஸ்டாம்புகள்	3,00,00,000
காடுகள்	1,10,40,000
பத்திரப் பதிவு	80,00,000
மோட்டார் சட்டம்	3,40,00,000
விற்பனை வரி	9,50,00,000
இதர இனம்	2,64,00,000
மின்சாரம் செலவு போக	2,07,16,000

★

சில முக்கிய முதலீட்டு செலவுகள்

—o—

ஜமீன் ஒழிப்பு	35,00 000
நீர்ப்பாசனம்	6,08,16 000
தொழில் வளர்ச்சி	9,82 000
சிவில் வேலைகள்	78 54 000
மின்சாரம்	4,95,56,000
ரோட்டு, போக்குவரத்து	29,38,000

புதிய கல்வி திட்டத்திற்கு ரூ.100 அடையாள மான்யம்

புதிய வரி மூலம் எதிர்பார்க்கும் வருமானம் ரூ. 40 லட்சம்தான்!

1954-55 வரவு-செலவு திட்டத்தில் துண்டு விழும் தொகை ரூ. 58 லட்சம்

சென்னை, பிப். 26—

இன்று நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் 1954—55 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சட்டசபையில் சமர்ப்பித்தார்.

வருமானம்:	ரூ	44,59,83,000
புது வரிகள் மூலம்:	ரூ.	40,00,000
ஆக மொத்த வருமானம்	ரூ	44,99,83 000
செலவு	ரூ.	45,17 88,000
துண்டு விழுவது	ரூ	18,05,000

இந்த வரவு - செலவில் துண்டு விழும் ரூ. 58 லட்சத்தில் சரிக்கட்டுவதற்கு ரூ. 40 லட்சத்திற்கு ஆன புது வரி உயர்வுப் பிரேரணைகளை நிதிமந்திரி அறிவித்துள்ளார். இரண்டு முக்கியமான வரி ரத்து சலுகைகளையும் அவர் வெளியிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

★

செலவினங்கள்

நிலவரி	76,42,000
எக்சைஸ்	41,09,000
ஸ்டாம்புகள்	18,84,000
காடுகள்	68.72,000
பத்திர பதிவு	39,53,000
மோட்டார் சட்டம்	65,69,000
வரிகள்	1,03,95,000
நீர்ப்பாசனம்	2,67 72,000
பொது நிர்வாகம்	71,82,000
சட்டசபை	22 69,000
மாவட்ட நிர்வாகம்	8,97,11,000
நீதி	1,08,34,000
சிறைகள்	1,08,67,000
போலீஸ்	4,83,53,000
கல்வி	8,67,78,000
சுகாதாரம்	91,18,000
விவசாயம், மீன்பிடி	2,22,86,000
கால்நடை	85,66,000
கூட்டுறவு	62,49,000
தொழில்கள்	1,66,71,000
அரிசன அபிவிருத்தி	90,40,000
தொழிலாளர் தொழிற்சாலை	14,67,000
சிவில் திட்டங்கள்	2,52 25,000
மின்சாரம்	5,06,42 000
பென்ஷன்	1,42,84,000
ஸ்டேஷனரி அச்சு	48,77,000
ச. உ. திட்டங்கள்	66,88,000
போக்குவரத்து	1,24,12,000

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 27—2—1954 சனி

குற்றமுள்ள நெஞ்சு!

கவர்னர் திறப்புரையின்மீது சட்ட சபையில் எழுந்த விவாதத்திற்கு சர்க்கார் சார்பில் விவசாய மந்திரி பக்தவத்சலனார் பதில் கூறி இருக்கிறார். இப்படி சட்ட சபை விவாதங்களுக்கு இதுவரை பதில் கூறி வந்திருப்பவர்கள் நிதி அமைச்சர் கனம் சுப்ரமணியமும், முதல் அமைச்சர் கனம் ஆச்சாரியார் அவர்களுமேயாவர். இந்த முறை, அந்த வழக்கத்தை கனம் ஆச்சாரியார் அவர்கள் மாற்றி இருப்பது சிறிதளவாவது ஆலோசிக்கத்தக்கதேயாகும்.

எதிர்ப்பாளர்களின் காரசாரமான பேச்சுக்கு விவசாய மந்திரி கூறியுள்ள பதில், எந்த வகையிலும் சிறப்பித்துக் கூறத்தக்கதாக இல்லை. பல பிரச்னைகளைக் குறித்து எதிர்க்கட்சியினர் விளக்கிப் பேசி இருந்தபோதிலும், அவைகளில் முக்கியமாக இரண்டு விஷயங்களைக் குறித்துத்தான் உறுப்பினர்கள் அதிகமாக வலியுறுத்திக் கூறி இருக்கிறார்கள்.

ஒன்று, நாட்டு மக்கள் அனைவரின் கவனத்தையும் கவர்ந்துள்ளதும், எதிர்கால சந்ததியினர் கல்விக் கண்ணைக் குருடாக்குவதுமான புதிய தொடக்கக் கல்வியைப் பற்றியதாகும். மற்றொன்று, நாட்டில் மிகத் தீவிரமாக தொத்துநோய் போல் பரவி வருகிற வேலையின்மையைப் பற்றியதாகும்.

கல்வித் துறையின், எந்த ஒரு மூலையில் திருத்தம் செய்வதாக இருந்தாலும், அந்தத் துறையில் நிபுணர்களாக உள்ள கல்வித் துறையினரைக் கொண்டு, ஒரு திட்டத்தை உருவாக்கச் செய்து, அந்தத் திட்டத்தின் மீது பொது மக்களின் கருத்தறிவிப்பதற்குப் போதிய அவகாசம் கொடுத்து, அதன் பிறகுதான் அத்திட்டத்தை அமுல் நடத்த எந்த சர்க்காரும் இதுவரை முன்வருவது வழக்கம். இந்த நடைமுறையைத்தான் எல்லா நாடுகளும் பின்பற்றி வந்துள்ளன—வருகின்றன.

நிபுணர்கள் தீட்டிய திட்டத்திற்குப் பொதுமக்கள் ஆதரவு அமோகமாக இருந்தபோதிலும், திட்டத்தை உள்ளடக்கி ஒரு மசோதாவாக உருவாக்கி, சட்டசபை முன் கொண்டுவந்து, சபை அனுமதி பெற்று, சட்டமாக்கி நடைமுறைக்குக் கொண்டுவருவதுதான். மக்களாட்சி முறைப்படி இயங்குவதாக சொல்லிக் கொள்ளுகிற எந்த சர்க்காரும் மேற்கொள்ளும் நியாயமான பாக்கு இதுதான், வெள்ளையர்கள் ஆண்ட காலத்திலும் கூட, இந்தச் சிறந்த நடைமுறையைத்தான் அவர்கள் பின்பற்றினார்கள். தொடக்கக் கல்வி சட்டம் என்ற ஒரு சட்டம் இன்றும் சட்ட புத்தகத்தில் இருந்துதான் வருகிறது.

இது ஒரு பக்கம் இருக்கட்டும், உயர்நிலைப் படிப்பை திருத்தியமைக்க வேண்டும் என்பதற்காகக் கூட, ஒரு நிபுணர் குழுவை நியமித்து, தீர விசாரித்து, அதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்துத் தர யூனியன் சர்க்கார் ஏற்பாடு செய்தது. அப்படியே அந்த நிபுணர் குழுவும், தமக்கிட்ட கட்டளையை செவ்வனே செய்து, ஒரு திட்டத்தை உருவாக்கி முடித்திருக்கிறது. அதை அடிப்படையாகக் கொண்டு, இனி ஒவ்வொரு மாநில சர்க்காரும் உயர்நிலை கல்வித் துறை பற்றிய சட்டமியற்றி, அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியதுதான் மிச்சமாக இருக்கிறது.

ஆனால், ஆச்சாரியாரோ புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்த முறையே, எதேச்சாதிகாரப் போக்குடையதாகும். எந்தக் கல்வி நிபுணர்களையும் அவர் கலந்து கொள்ளவில்லை. இப்போதுள்ள வெள்ளையர் புகுத்திய தொடக்கக் கல்வி முறை கருக் கொள்ளுவதற்கு முன்னதாகவே, தம்முடைய விபரீதமான புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தை, தமது மூளையில் உருவாக்கிவிட்டு இருக்கிறார். ஒரு திட்டம் செயலாற்றப்பட்டு, அப்படி செயல்படும்போது அதன் பயனாக விளையும் நன்மை, தீமைகளை நுணுகி ஆராய்ந்து, தீமைகளைக் களைந்தெறிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஒருவர் நினைப்பதுதான் நியாயமான முறையாகும்.

ஆனால், ஆச்சாரியாரோ பிரிட்டிஷார் உருவாக்கிய தொடக்கக் கல்வித் திட்டம் புகுத்தப்படுவதற்கு முன்பாகவே, இந்த நாட்டுச் சிறார்களின் கல்வி போதனை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்று ஒரு முடிவுக்கு வந்துவிட்டு இருக்கிறார். அதாவது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே, ஏதோ ஒரு உள்ளெண்ணத்தை உடும்புப்பிடியாகப் பிடித்துக்கொண்டு, வாய்ப்பு நேரும்காலை, அந்த விஷத்தை வெளியில் கக்குவது என்று, கனம் ஆச்சாரியார் அந்தக் காலத்திலேயே தீர்மானித்துக் கொண்டு இருக்கிறார். நிற்க,

புதிய கல்வித் திட்டத்தைப் புகுத்தின வகையில் கனம் ஆச்சாரியாருக்கு எந்தவித அரசியல் நோக்கமும் கிடையாது என்றும், அதற்கு மாறாக அதை எதிர்க்கிறவர்களுக்குத்தான் அரசியல் நோக்கம் இருக்கிறது என்றும் மந்திரி பக்தவத்சலனார் குறிப்பிட்டிருக்கிறார்.

திட்டத்தைப் புகுத்திய ஆச்சாரியாருக்கு அரசியல் நோக்கமட்டுமேயல்லாமல், ஒரு பெரிய சமூகத்தையே காட்டுமிராண்டிக் காலத்திற்கு இட்டுச்சென்றுவிடவேண்டும் என்ற பயங்கரமான பேய்க்குணம் கொண்டிருக்கிறார் என்பதை மேற்காட்டியவற்றால் வாசகர்கள் ஒருவாறு உணர்ந்து கொண்டிருக்கக்கூடும். மேலும் அதுபற்றி விளக்கமாக மற்றொரு முறை எழுதுவோம்.

திட்டத்தை எதிர்ப்பவர்களுக்கு அரசியல் நோக்கம் இருப்பதாக மந்திரி கூறுவது எவ்வளவு தூரம் உண்மையானது என்று பார்ப்போம். எதிர்ப்பாளர் பட்டியலில் பக்தவத்சலனார் பெயரும், அவர் அமைச்சராவதற்கு முன்னால் இருந்திருக்கிறது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பதுபோல, திட்டத்தை நாம் எதிர்த்ததற்கு அரசியல் காரணமாக இருக்கவே, மற்றவர்கள் எதிர்ப்பிற்கும் அதே அரசியல்தான் காரணமாக இருக்கும் என்று மந்திரி பக்தவத்சலனார் முடிவுகட்டிப் பேசுவதில் வியப்பொன்றுமில்லை இதுபற்றி நாளை மீண்டும் தொடர்ந்து எழுதுவோம்.

நிலமற்ற உழவர்களின் பரிதாப நிலை

—(:)—

வருமானத்தை விட செலவு அதிகம்

புதுடில்லி, பிப். 26—

இந்தியக் கூணைக்கண்டத்தில் உள்ள நிலமற்ற உழவர் குடும்பங்களின் ஆண்டு வருமானம் ரூ 447 - ஆக இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு குடும்பமும் செலவிடும் தொகையோ ஆண்டு ஒன்றுக்கு 468 - ஆக இருக்கிறது:

மேற்குறித்த உண்மையை விவசாயத் தொழிலாளர்களின் செல்வநிலை பற்றி விசாரித்து அறிய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது அக்குழுவின் முழு அறிக்கை உருவாக மேலும் சில நாட்கள் செல்லக்கூடும் என்று சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு குடும்பமும் ஆண்டு ஒன்றுக்கு ரூ 7 வீதம் மதச் சடங்குகளில் செலவு செய்கிறது என்றும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

மொத்தத்தில் 45 சதவிகித குடும்பங்கள் கடன்பட்டுள்ளன. சராசரி ஒரு குடும்பத்தின் கடன் தொகை ரூ 105 ஆகும். இந்தக் கடன் தொகையில் வயிற்றை நிரப்பிக்கொள்வதற்காக மட்டும் பட்டுள்ள கடன் தொகை ரூ 78 என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

அவர்கள், வட்டி கடைக்காரர்களிடமிருந்தும், உத்தியோகஸ்தர்களிடத்திலிருந்தும் கடன் பெற்றுள்ளார்கள். வட்டி கடைக்காரர்களிடம் ரூ 38, உத்தியோகஸ்தர்களிடம் ரூ 22 என்றமுறையில் நிலமற்ற உழவர் குடும்பங்கள் கடன்பட்டுள்ளன.

இந்தத் தகவலை டில்லி பார்லிமெண்டில் தொழிலாளர் மந்திரி வி. வி. கிரி அவர்கள் அறிவித்தார்.

நிலம் இல்லாதவர்களுக்கு நிலம்

கர்நூல், பிப். 25—

சர்க்காரின புறம்போக்கு நிலங்களில் 5 ஏகராவுக்கு அதிகமாக யாரிடமாவது இருப்பின், உபரியான நிலத்தைக் கைபற்றி நிலமில்லாத ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுக்கும்படி ஆந்திர சட்டசபையில் கம்யூனிஸ்டு உறுப்பினர் பிரேரபித்த தீர்மானத்தை சர்க்கார் ஏற்றுக் கொண்டது. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

நீடிப்பு!

சென்னை, பிப். 25—

திருச்சி மாவட்டத்தில் எல்லாக் கடிதப் போக்குவரத்துகளையும், சர்க்கார் நடவடிக்கைகளையும் தமிழிலேயே நடத்தும் சோதனையை, 1954 ஜனவரி 1-ந் தேதி முதல் மேலும் ஒரு ஆண்டிற்கு நீடிக்க முடிவு செய்துள்ளனர்.

அரிஜனங்களுக்கு உதவி

பாட்னா, பிப். 26—

குடிசைத் தொழில்களை ஏதாவது ஒன்றை ஆரம்பித்து வருமானம் தேடுவதற்கு மூலதனமாக சிறு அளவு பண உதவியை மாங்கீர் மாவட்டத்தைச் சார்ந்த 11 அரிஜனங்களுக்கு பீகார் சர்க்கார் அளிக்கவிருக்கிறது. 10 பேர்களுக்கு தலா ரூ. 500-ம் ஒருவருக்கு ரூ 200-ம கொடுக்கபடும்.

"நல்ல சுகத்தை அனுபவிக்கிறார்கள்!"

ரயில்வே ஊழியர்கள் நிலைபற்றி அளகேசனார்!

புதுடில்லி, பிப். 25—

மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கு வேண்டிய வசதிகளும், சௌகரியங்களும் வரவர அதிகரித்துக்கொண்டே வருவதாக ரயில்வே வரவு-செலவு விவாதத்தின்போது இந்திய ரயில்வே உதவி மந்திரி கூறினார். அவர் மேலும் கூறுகையில், நாட்டிலுள்ள மற்ற மக்களைக் காட்டிலும் ரயில்வே ஊழியர்கள் நல்ல சுகம் அனுபவிப்பதாகத் தெரிவித்தார். அவர்களின் குடியிருப்புப் பிரச்சினை வசதியைத் தீர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், இந்த விஷயத்தில் பணம் வேண்டியிருப்பதோடு, வீடுகள் கட்டுவதற்கான சாமான்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறதென்றும் தெரிவித்தார்.

போலந்து - அமெரிக்க உறவு ரத்து

தூதுவ நிலையங்களை மூடிவிட அமெரிக்கக் கட்டளை

வாஷிங்டன், பிப். 25—

நியூயார்க், சிகாகோ, டெட்ராய்ட் ஆகிய மூன்று அமெரிக்க நகரங்களிலும் தற்சமயம் போலந்து நாட்டின் அதுவர் காரியாலயங்கள் உள்ளன. அவைகளை மூடிவிடும்படி, போலந்து சர்க்காருக்கு அமெரிக்கா கட்டளை இட்டுவிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

"சலுகை கோரவில்லை—உறுதி தரவில்லை"

பாக் - பிரதமர் அறிவிப்பு

காரச்சி, பிப். 25—

அமெரிக்க பரஸ்பர பந்தோபஸ்து சட்டத்தின்கீழ் பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி அளிக்க அமெரிக்கா ஒப்புக்கொண்டிருப்பதாக பாகிஸ்தான் பிரதம மந்திரி அறிவித்தார். உதவியின் அளவு, சாதனங்களின் தன்மை பற்றி அவர் எதுவும் அறிவிக்கவில்லை

"அமெரிக்க இராணுவ உதவிக்காக நாம் எவ்விதமான பொறுப்பையும் ஏற்கவில்லை. அமெரிக்காவுக்கு இங்கு தளமோ, வேறு எவ்விதமான சலுகையோ கோரவில்லை; பாகிஸ்தான், தானாக சலுகை அளிப்பதாகவும் சொல்லவில்லை." என்று மேலும் அவர் சொன்னார்.

மன்னர்கள் வருகை!

காரச்சி, பிப். 25—

சவூதி அரேபியா மன்னர் ஏப்ரல் 14-ந் தேதியும், ஈரான் மன்னர் மார்ச் 12-ந் தேதியும் இங்கு அரசாங்க முறையில் வருவார்களெனத் தெரிகிறது.

செய்திச் சுருக்கம்

புதுடில்லி, பிப். 24—

1953-ல் நிலக்கரிச் சுரங்கங்களில் ஏறக்குறைய 331 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

காரச்சி, பிப். 26—

1-லட்சம் ரூபாய் செலவில், சிந்துவில் முதல் க்ஷயரோக சிகிச்சை நிலையம் ஏற்படுத்தப்படும்.

• • •

புதுடில்லி, பிப். 24—

1953—54 ஆண்டிற்கு மத்திய சர்க்கார் செலவினங்களுக்கான ரூ. 83,89,12,000 உப-மானியக் கோரிக்கைகள் மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

• • •

பாக்தாத், பிப். 26—

பாகிஸ்தான்—துருக்கி உடன்படிக்கை வலையில் ஈராக் வீழ்ந்துவிடக் கூடாதென்று ஈராக் நாட்டின இடதுசாரி, வலதுசாரி அரசியல் தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

* * *

புதுடில்லி, பிப். 26—

பார்லிமெண்டின் இரு சபைகள் முன்வரும் பிரச்சினைகள் விஷயமாக ஆராய்ந்து அறிவதற்காக பெண் எம். பி-க்கள் தனித்து அடிக்கடி கூடுவதற்கான ஏற்பாடுகள் முயற்சியில் செய்யப்பட்டுள்ளது.

* * *

பெர்லின், பிப். 26—

ஜெர்மன் இராணுவத்தில் இப்போது 5,50,000 பேர் இருக்கிறார்கள். ஐரோப்பிய பாதுகாப்பு உடன்படிக்கை அங்கீகரிக்கப்பட்டால்தான் மேற்கு ஜெர்மனி இராணுவம் ஏற்பட்டதாகக் கருதப்படும்.

* * *

ராஜ்கோட்டை, பிப். 26—

சௌராஷ்டிர சர்க்கார் குழந்தைகள் நலன் குறித்து அதிகக் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டனர். குழந்தைகள் நலன் பற்றிய ஒரு மசோதா மாநில சட்ட சபையில் கொண்டுவரப்படும்.

* * *

டாக்கா, பிப். 26—

கிழக்கு பாகிஸ்தானில் முதல் பொதுத் தேர்தல் மார்ச் 2-ந் தேதி ஆரம்பமாகும். 2 கோடி வாக்காளர்கள் வோட் செய்வர். இவர்களில் பாதிபேர் பெண்கள். 394 இடங்களுக்கு 1,285 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

* * *

புதுடில்லி, பிப். 26—

"ஜிக்தி" பத்திரிகை ஆசிரியரும், டில்லி ஜமாத்-இ-இஸ்லாமியின் பொதுச் செயலாளர் மௌலானா அபுல் வசும், தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

°° °° °°

கட்டாக், பிப். 26—

ஜமீன் ஒழிப்பைத் தொடர்ந்து ஒரிசா சர்க்கார் நிர்வாக விஷயத்தில் புது சீர்திருத்தங்களைக் கொண்டுவரும். இத்துறையில் முதல்படியாக ஒரிசா மாநிலத்திலுள்ள ஜில்லா போர்டுகளின் நிர்வாகத்தை மேற்கொள்ளும்.

* * *

புதுடில்லி, பிப். 23—

கடந்த ஆண்டில் இராணுவத்தைச் சேர்ந்த 68 பேர்கள் தற்கொலை புரிந்துள்ளனர். அவர்களில் 22 பேருக்குக் குடும்பக் கவலையே காரணம். காதலினால் கடற்படை வீரரும், 4 தரைப் படையினரும் உயிரை மாய்த்துக் கொண்டனர்.

• • •

பாட்னா, பிப். 25—

பீகார் சட்ட சபையில் பணிபுரியும் 18 வயதுடைய தற்காலிக பியூன் இன்று காலை அலுவலகத்துக்கு யானையின் மீது வந்து சேர்ந்தார். அவர் செக்ரெட்டேரியட்டுக்கு வெளியில் தனது யானையைக் கட்டிவிட்டு வேலைகளைக் கவனித்தார்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

—(:)—

சப்-இன்ஸ்பெக்டர் சாட்சியம்

தூத்துக்குடி, பிப். 25—

தூத்துக்குடி கலவர வழக்கு விசாரணை மீண்டும் 22—2—54ல் தொடங்கியது. போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் முகம்மதுகானின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

அரசாங்க மருத்துவ விடுதியில் அவர் நோயாளியாக இன்னும் இருந்து வருகிறார். அவர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:

"கே. வி. கே. சாமியையும், நடராசனையும் ஜுலை மாதம் 14ந் தேதி இரவில் கைது செய்தேன்; எனக்கு அவர்களை நன்றாகத் தெரியும்; தங்கப்பழம், சிவசாமி, நடராசன் ஆகியோரைத் தேடியும் அவர்கள் அகப்படவில்லை; ஜுலை 15-ந் தேதியன்று இவ் வட்டாரப் பொறுப்பு என்னிடமிருந்தது,

"ஜுலை மாதம் 15ந் தேதி காலையில் தி. மு. கழகத்தினர் ரயிலை நிறுத்தப் போவதாகக் கேள்விப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை முந்தின நாளன்று செய்தேன். என் வட்டாரத்திலுள்ள நான்கு ரயில் நிலையங்களிலும் போலீசுக்காரர்களைக் காவலுக்கு ஏற்பாடு செய்தேன்.

"ஜுலை 15ந் தேதி விடியற்காலை 5 மணிக்கே தூத்துக்குடி மேலூர், தூத்துக்குடி நிலையம் ஆகிய இடங்களுக்குச் சென்று பந்தோபஸ்துக்கான ஏற்பாடுகளைச் செய்தேன். துணை போலீசு சூப்பரின்டெண்டு, தூத்துக்குடி ரயில் நிலையத்துக்குக் காலை 6 மணிக்கு வந்து சேர்ந்தார்; சில தொண்டர்களுக்குத் தங்கப்பழமும், சிவசாமியும் உத்தரவு கொடுத்துக்கொண்டு வருவதை நான் கண்டேன்; போலீசுத் துணை சூப்பரின்டெண்டின் உத்தரவின் பேரில் அவர்களைக் கைது செய்து இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் தங்குமிடத்தில் வைத்திருந்தேன்.

"கோயம்புத்தூர் பிரயாணிகள் வண்டி காலை 6-25 மணிக்கு தூத்துக்குடியை விட்டுக் கிளம்பியது. சில ரிசர்வ் தான்ஸ்டேபிள்களுடன் ரயிலுடன் கூடவே சென்றேன்; 15 கெஜ தூரத்தில் ரயில் நிறுத்தப்பட்டது. எதிரிகளில் ஒருவர் சங்கிலியைப் பிடித்திழுக்கையில், ஏனைய ஐந்து பேர்கள் அரசாங்கத்துக்கு எதிரான குரல்களை எழுப்பினர்; அவர்கள் எல்லோரையும் கைது செய்தேன்; வெளியிலிருக்கும் கைகாட்டி அடையாளத்தின் அருகே செல்லுமுன் மூன்று தடவைகள் முன்செய்த முறைப்படியே ரயில் நிறுத்தப்பட்டது; மொத்தத்தில் 33 பேர்களை நான் கைது செய்தேன்; தனித்தனியாக அவர்களை அடையாளம் காண்பிக்க முடியும்; ஆனால் கூட்டாக முடியாது.

"அவர்களுடைய பெயர்களைக் கேட்டறிந்து கொண்டு கைதிகள் பதிவுப் புத்தகத்திலும், முதல் செய்தி அறிக்கையிலும் (எப். ஐ ஆர்) பதிவு செய்தேன்; நான்காவது தடவையாக ரயில் நிறுத்தப்பட்ட பின், ரயிலிலிருந்த வாகுவம் துண்டிக்கப்பட்டது; ரயிலும் மேலூர் நிலையத்தை காலை 7 மணிக்கு வந்து அடைந்தது; பத்திரகாளியம்மன் கோவிலுக்கு மேல்புறம் வண்டி வந்து நின்றது. என்ஜினுக்கு முன்பு 120 பேர் உட்கார்ந்திருந்தனர்; இருபக்கங்களிலும் 1,000 பேர்கள் வரை இருந்தார்கள்.

"உட்கார்ந்திருந்தவர்களை வெளியேறச் சொல்லியும் பயனில்லை; துணைப் போலீசு சூப்பரின்டெண்ட் அங்கு காலை 7-30 மணிக்கு வந்தார்; ஆண்டாள் தெருப்பக்கமாகவுள்ள வடபக்கத்திலிருந்த கூட்டத்தினரை அப்புறப்படுத்திவிட்டு, அந்த சப்-இன்ஸ்பெக்டர் தலைமையில் போலீசுக்காரரை நிறுத்தி வைத்தேன்; உட்கார்ந்திருப்பவர்களை வெளியேறும்படி துணைப்போலீசு சூப்பரின்டெண்ட் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை; இந்த இயக்கத்தை நடராசன் நடத்திச் சென்றார்; அவரை எனக்கு நன்கு தெரியும்; வெஙுநாட்களாக சாமி, இரத்தினம், தங்கப்பழம், சிவசாமி ஆகியோரை நான் அறிவேன்; அவர்கள் இப்பொழுது நீதி மன்றத்திலிருக்கின்றனர்; நடராசனைக் கைது செய்ததும், கூட்டத்தினர் குரலெழுப்பி, என் கீழுள்ள போலீசார் மீது கற்களை எறிந்தார்கள்; நிலைமை சிறிதும் கட்டுக்கடங்காமற் போய்விடவே, சப்-கலெக்டருக்குப் போன் மூலம் தெரிவித்தேன்; காலை 8 மணிக்கு அவர் வந்து சேர்ந்தார்; உட்கார்ந்திருப்பவர்களைக் கலையும்படி அவர் சொல்லியும் பயனில்லை; உட்கார்ந்திருந்தவர்களிடையே இருந்த வேலுசாமி, விசயரங்கம், வெங்கடாசலம், சுப்பையா, சண்முகய்யா ஆகியோரைக் கைது செய்தேன். (அவர்களை அடையாளம் காண்பித்தார்.) அவர்களைப் போலீசு லாரியில் ஏற்றினேன். கூட்டத்திலிருந்தவர்கள் குரலெழுப்பினர்.

"சப்-கலெக்டரின் உத்தரவின் பேரில், உட்கார்ந்திருந்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டது; உட்கார்ந்திருந்தவர்கள் தரையில் படுத்துவிட்டனர் தடியடியாலும் பயனில்லை மாவட்டக் கலெக்டர் காலை 8-30 மணிக்கு வந்தார். கைதானவர்களை விடுதலை செய்தால், உட்கார்ந்திருப்பவர்களை எழுந்து செல்லுமாறு தாம் கூறுவதாக நடராசன் என்னிடம் தெரிவித்தார்.

"நடராசன் உள்பட எல்லோரையும் விடுதலை செய்யும்படி கலெக்டர் உத்தரவிட்டார். உட்கார்ந்திருந்தவர்களுக்கப்பால் நின்றுகொண்டிருந்த கூட்டத்திற்குள் சென்ற நடராசன் திரும்பி வரவேயில்லை; விடுதலையான ஏனையோர்களும் கூட்டத்தினருடன் கலந்துகொண்டு விட்டனர்; 'அன்று கடைசியாகச் செல்லும் ரயில் மாலை 5-30 மணிக்கு புறப்படுகிறது; அதுவரை கூட்டம் கலையாது போலிருக்கிறது' என்று கலெக்டரிடம் டிபுடி தாசில்தார் தெரிவித்தார்; இதற்குள் மலபார் ஸ்பெஷல் போலீசு வந்து, என்ஜினுக்கு முன்னும், ஆண்டாள் தெருவுக்கு அண்மையிலும், நிறுத்தப்பட்டிருந்த ரிசர்வ் போலீசின் இடத்தில் நின்றுவிட்டது; மாவட்டக் கலெக்டர் உத்தரவு பேரில், மலபார் ஸ்பெஷல் போலீசார் செய்த தடியடிப் பிரயோகத்துக்கும் பயன் அளிக்கவில்லை. வடபக்கத்திலிருந்த கூட்டத்தினர் போலீசார்மீது கற்களை வீசியதில், 3 பேர் காயமடைந்தனர். போலீசாரைக் கூட்டத்தினர் தாக்க ஆரம்பித்து விடக்கூடும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஆகையால் சுடுவதற்கு உத்தரவிட்டார். துணைப்போலீசு சூபரின்டெண்டு, ஜமேதாருக்கு உத்தரவு கொடுத்தார். எச்சரிக்கை செய்த பின் ரிசர்வ் போலீசு சுட ஆரம்பித்தது.

"தென் பக்கத்திலுள்ள கூட்டத்தினர் வன்முறையைக் கையாளத் தொடங்கி கற்களை வீசி எதிர்த்து போலீசாரை நோக்கிப் புறப்பட்டார்கள். உதவி போலீஸ் சூப்பிரின்டெண்டு மலபார் விசேஷ போலீசுக்கு சுடும்படி உத்தரவிட்டார்; எச்சரிக்கை செய்த பின்னர் அவர்களும் சுடத் தொடங்கினர். உட்கார்ந்திருந்தவர்களும் கூட்டத்திலுள்ளவர்களும் கலைபலானுர்கள். துப்பாக்கிப் பிரயோகமும் நின்றது.

ரிசர்வ் போலீசார் 16 தடவையும், மலபார் விசேட போலீசார் 8 தடவையும் சுட்டனர்; அந்த இடத்திலேயே மூன்று பேர் உயிர் துறந்தனர்; பலர் காயமடைந்தார்கள். அவர்கள் மருத்துவ விடுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். காயம்பட்டவர்களையும் நான் கைது செய்தேன்; காலை 11 மணிக்கு 'முதல் செய்தி அறிக்கை'யைத் தயார் செய்தேன்; அதற்குள் 56 பேர் கைது செய்யப்பட்டுவிட்டார்கள்; அப்பொழுதே அவர்களுடைய பெயர்கள் கைதிகள் தேடும் பதிவு புத்தகத்தில் பதிவு செய்துவிட்டேன்; அவர்களை மாத்திரம் எழுந்து நிற்கச் சொன்னால் அடையாளம் காட்ட முடியும் (எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க, ஒரு முக்கியக் கேள்வி எனப் பதிவு செய்யப்பட்டது.) உண்மையான பிரயாணிகளைத் தவிர்த்து சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தியவர்களையும், சுக்குரலிட்டவர்களையும் கைது செய்வதில் எச்சரிக்கையாகவே இருந்தேன்; யார் யார், எந்தெந்த இடத்தில் ரயில் சங்கிலியை இழுத்து நிறுத்தினர்கள் என்று என்னால் அடையாளம் காண்பிக்க முடியாது போனாலுங் கூட, முதலில் நிறுத்தியவரை அடையாளம் காண்பிக்க முடியும். சிவலிங்கம் அடையாளம் காண்பிக்கப்பட்டார். ரயில் பாதையில் உட்கார்ந்திருந்த சுமார் 35 எதிரிகளையும் சாட்சி அடையாளம் காட்டினார்.

சாட்சி மறுநாட்களில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுச் சொன்னதாவது:—

16—7—53 இரவில் அல்லது 17—7—53 காலை 1-45 மணிக்கு ஆர்வி ஆலைக்கு இன்ஸ்பெக்டர் இராமகிருஷ்ண ராசவுடன் சென்று 27 பேர்களையும் அடையாளம் காண்பித்துக் கைது செய்தேன்; 17ந் தேதி காலை 11-35 மணிக்கு ஆர். வி. ஆலைக்குச் சென்று 6 பேரை அடையாளம் காட்டிக் கைது செய்தேன்; 33 பேருக்குமாக ஒரு 'ரிமாண்டு ரிப்போர்ட்' அனுப்பப்பட்டு கைதிகள் தேடும் பதிவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது; 20-ந் தேதியன்று இன்னும் நான்கு பேர்களைக் கைது செய்து காவலில் வைக்கும்படி செய்தேன். 1941, 42, 46, 48, 49, 1953 ஏப்ரல் முதல் 2—1—54 வரையில் தூத்துக்குடியில் சப்-இன்ஸ்பெக்டராக இருந்திருக்கிறேன். 3—1—54 முதல் மருத்துவ விடுதியிலிருக்கிறேன்."

குறுக்கு விசாரணை

எதிர் தரப்பு வழக்கறிஞர் திரு நெல்லையப்ப பிள்ளை முகம்மது கானை குறுக்கு விசாரணை செய்த போது, கான் அளித்த பதிலாவது:—

"ஜுலை 12ந் தேதி பொதுக் கூட்டத்திற்குப் பின்தான், ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்திற்கு எதிராக தி. மு. கழகம் கிளர்ச்சி செய்து வருகிறதென்பது எனக்குத் தெரியும்; கல்வித் திட்டத்துக்கு எதிராகப் பொது மக்கள் கருத்தை உருவாக்கக் கூட்டம் கூட்டப்படவில்லை, ஜுலை மாதம் 15-ந் தேதி தன் கட்சி என்ன செய்யப் போகிற தென்பதை அறிவிக்கவே இக்கூட்டம் கூட்டப்பட்டது; 150 பேர் வரை இக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்; தி. மு. கழகத்தின் தலைவராகவோ அல்லது உறுப்பினராகவோ கே. வி. கே. சாமி இல்லை யென்பதையும் மறுக்கிறேன்; இது சம்பந்தமாக எழுத்துச் சான்று பற்றி எனக்குத் தெரியாது போயினுங்கூட அவருடைய பேச்சுக்களிலிருந்து தி. மு கழகத்தின் சார்பாகவே கூறப்பட்டவை எனத் தெரிந்துகொண்டேன்; தி. மு. கழக அலுவலகத்திற்கு நான் சென்றதும் கிடையாது; அது எங்கிருக்கிறதென்பதும் எனக்குத் தெரியாது.

இன்னும் பல கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்குள் அவர் களைப்பாகக் காணப்பட்டதால், மேற்கொண்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இஸ்லாமியக் கல்லூரி தமிழ்மன்ற ஆண்டுவிழா

வாணியம்பாடி, பிப். 24—

இஸ்லாமியக்கல்லூரியின் தமிழ் மன்ற ஆண்டுவிழா 21—2—54 மாலை 6 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது. மன்றச் செயலாளர் நா. பரந்தாமன் அவர்கள் தலைமை வகித்து, ஆண்டு அறிக்கை படித்தார்.

தோழர் க. அன்பழகன் அவர்கள் 'கலையும் வாழ்வும்' என்னும் பொருள் குறித்து விரிவுரை நிகழ்த்தினார்.

கோவில்பட்டி வட்டார ஆதி திராவிட சீர்திருத்த சங்கம்

18—2—54 மாலை 5 மணியளவில் லக்கடிசால் சங்க அலுவலகத்தில் உறுப்பினர் கூட்டம் தோழர் மூ. பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: இரா. சு. பெரியதனம்; துணைத் தலைவர்: அ. மு. குமரவேல்; செயலாளர்: எஸ். இராசன்; துணைச் செயலாளர்: எஸ். யாக்கோப்பு சாமி; பொருளாளர். உ. கு. வேதமுத்து;

நிர்வாகக் குழுவினர்களாக எம். பி. சத்தியாகு, கா. சு. பொன்னையா, இரா. சவரிமுத்து, கா. மு. பெரியசாமி, க. மு வேலாயுதம், மு. அருணாசலம், கே. எஸ். கோவில் பிள்ளை, எம். சுப்பையா: இரா. மு அப்பப்பன், எம். கோவில் பிள்ளை, பி. நவமணி, மு. ஆறுமுகம், அ. ஆ மாசிலாமணி, இரா.சு.அருமைநாயகம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குறள் நெறிக் குழு

குறளைப் பரப்புவதும், தமிழ் உணர்ச்சி உண்டாக்கப் பாடுபடுவதும் என்ற தலையாய கொள்கையின்கீழ், 28—1—54ல் சென்னை பெரம்பூர்-திருவள்ளுவரில் குறள் நெறிக் குழு அமைக்கப்பட்டது. தலைவர்-ஆ லிங்கேசன்; செயலாளர்-இர. மு சௌந்தரராசன்; துணைச்செயலாளர்-இர. நித்தியானந்தம்; பொருளாளர்-ந. மரியதாசன்ஸ்; கணக்குப் பரிசோதகர்-இர மு. கோபாலகிருஷ்ணன்.

தேவேந்திர வேளாளர் சங்கம்

தாராவி, (பம்பாய்) பிப். 25-

17—2—54 இரவு 7 மணிக்கு சங்க இல்லத்தில் 5-வது ஆண்டு விழா தோழர் கே கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் கே. எஸ். பிச்சையா வரவு-செலவு கணக்கு வாசித்தார். பல தோழர்கள் பேசினர். புத்தாண்டு நிர்வாகிகளாகத் தோழர்கள் பி. எஸ். சண்முகம் தலைவராகவும், அனந்தப்பா துணைத் தலைவராகவும், கே வி. செல்லையா பொருளாளராகவும், எ; எஸ். எஸ். மாடசுவாமி பொதுச்செயலாளராகவும், கே. எஸ். பிச்சையா, எஸ். எஸ். மாடசாமி துணைச்செயலாளராகவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

திருவாரூர் நகரசுத்தி தொழிலாளர் சங்கம்

21—2—54 பகல் 1 மணிக்கு தோழர் ந. திபாகராசன் தலைமையில், நகர சுத்தி தொழிலாளர் மகாசபைக் கூட்டம் நடைபெற்றபோது, நிர்வாகிகளால் ஏற்படும் இடைஞ்சல்களிலிருந்து மீள்வது பற்றி ஆலோசிக்கப்பட்டது. (இ. கி.)

தாராவி தமிழ்ப் பள்ளி

கட்டிட நிதிக்குழுக் கூட்டம்

பம்பாய், பிப். 23—

நிதிக் குழுவின் உறுப்பினர்கள் கூட்டம் தோழர் எம். கி. துரைசாமி தலைமையில், 15—2—54 இரவு 9 மணியளவில் குழுப் பணிமனையில் நடைபெற்றது. தோழர் என்.எம்.என் சுப்பையாவைபொருளாளராகப் பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

தாராவி தமிழ்ப் பள்ளிக் கட்டிட நிதிக் குழுவின் பெயரை மாற்றி, தாராவி தமிழர் கல்விக் கழகம் என அமைக்கப்பட்டது.

கடலங்குடி வேலாயுத மன்றம்

21—2—54 மாலை 5 மணிக்கு தோழர் எ. வைத்திலிங்கம் தலைமையில் உறுப்பினர் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்: எ. வயித்திலிங்கம்; துணைச்செயலாளர்: என். சி. ராமநாதன்; பொருளாளர்: கே. பி. இரங்கநாதன்; மாவட்டப்பிரதிநிதி: டி. பழனிவேலு; விளம்பர உறுப்பினர்: என். என். சாமியா; நிர்வாக உறுப்பினர்கள்: செல்லையன், கே. வேணுகோபாலன், பி. குருநாதன், எம். ராசமாணிக்கம், ஆர். சம்மந்தம், ஆர் பழனி, கே. வீரப்பன், டி. வைத்திலிங்கம், எம். ஐயாறு, எம். உலகநாதன், கே. கலியன் ஆகியோர்.

தோழர்கள் கருணாநிதி, கே. கே. நீலமேகம் ஆகியோரை அழைப்பதென்றும், தூத்துக்குடி சதி வழக்குக்கு பணம் சேர்ப்பது என்றுதீர்மானிக்கப்பட்டது.

மறுமலர்ச்சி நாடக மன்றம்

கடம்பூர், பிப். 25—

21—2—54 மாலை 4-30 மணியளவில், தி. மு. கழகப் பணிமனையில் தோழர் சு. தருமராசு தலைமையில் நடைபெற்ற மன்றத்தின் கூட்டத்தில் செயற்குழு தேர்தல் நடைபெற்றது.

செயலாளர்: எம். எஸ். பி. சாமி; துணைச் செயலாளர்: செ. முத்தையா; பொருளாளர்: இரா. சங்கரலிங்கம்; கலைஞர்: பு. பொன்னுசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: செ. பொன்னுசாமி, ஆ. இராமச்சந்திரன், ஏ. டி. பி. ராஜன், கே. எல். நாராயணன், மா. கா. துரைராஜ், பொ. மாரியப்பன், என். கணேசன், சா. மாரியப்பா, பி டி. ராசன், இரா. பால்ராசு, மு. சு. இராமசாமி, ப. பெரியசாமி, மு. முத்தையா, மதிமொழியாளன், மா. தருமராசு, ப. செந்திவேல்.

அண்ணாமலை நகரில் அன்பழகன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியக் கழகச் சார்பில் 6—3—54ல், நடைபெறும் பூவராகவன் பிள்ளை — படத்திறப்பு விழா — வாழ்த்தியர் விரிவுரை ஆகிய நிகழ்ச்சிகளில் தோழர் க. அன்பழகன் எம் ஏ., அவர்கள் கலந்துகொள்வார் என த. இ. கழகத் துணைச்செயலாளர் அ. இராமசாமி அறிவிக்கிறார்.

அனுதாபம்

சென்னை, பிப் 25—

எழும்பூர் 32-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்களான தோழர்கள் ஆர். சேகரன், ஆர். பாபு ஆகியவர்களுடைய அன்னை ஜி. கௌரி அம்மாள், 8—2—54 பகல் 12 மணிக்கு இயற்கை எய்தியமைக்கும், மற்றொரு உறுப்பினர் தோழர் மாணிக்கம் அவர்களுடைய அன்னை அமிர்தம் மாள் 23-2-54 மாலை 5 மணிக்கு இயற்கை எய்தியமைக்கும் எழும்பூர் 32-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், செயலாளர் டி. என். இராவணன், அவர்களுடைய உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டு ஊர்—நமது அனுதாபம் உரித்தாகுக—(ஆர்.)

நகிப்பின் 'இரட்டை நாக்கு!'

கெய்ரோ, பிப். 26—

நகிப்பை தாங்கள் கொன்றிருக்க முடியும் என்றும், ஆனால் அவருக்கு உயிர்ப்பிச்சை அளித்திருப்பதாகவும் எகிப்திய தேசிய வழிகாட்டி மந்திரி சாலே சலீம் கூறியுள்ளார்.

நகிப் கைது செய்யப்பட்ட செய்தியும் அவரால் மறுக்கப்பட்டிருக்கிறது. சிறிது காலம் வீட்டை விட்டு வெளியேறவேண்டாமென்று தான் நகிபிடம் சொன்னேனும்.

மேலும் அவர் ஒரு அறிக்கையில் கூறுவதாவது:

தமக்கு இராணுவத்தின் ஆதரவில்லை என்று தெரிந்தும், நகிப் தேச மக்களின் ஆதரவைப் பெற முனைந்திருந்தார். கட்சிகளுக்குள் மோதவிட்டார்.

முஸ்லீம் சகோதரத்துவ சங்கத்திற்கு எதிராக பொதுவுடமையாளர்களையும், மன்னரின் ஆதரவாளர்களையும், ஏவிவிட்டார்.

பாகிஸ்தானிடம் இந்தியாவைப் பற்றியும், இந்தியாவிடம் பாகிஸ்தானைப் பற்றியும் குறை கூறினார்.

தேசத்தில் காணப்படும் தவறுகளைக் களைய தனக்கு அதிகாரம் இன்னும் தேவையென்றார் நகிப்.

முன்னாள் பிரதமர் அப்துல் ஹாதிக்கு புரட்சிக் கோர்ட் மரண தண்டனை விதித்தபோது அப்துல் ஹாதியின் மனைவியை வீட்டிற்குச் சென்று தன்னால் எதுவும் செய்ய சக்தியற்றவனாக இருப்பதாகக் கூறினார்.

நகிப் தனது விலகல் கடிதத்தில் எதையும் குறிப்பிடவில்லை. தொடர்ந்து பணியாற்ற சாத்தியமில்லை என்று மட்டுமே கூறியிருந்தார்.

எகிப்தில் நகிபிற்கு எதுவும் தடை உத்தரவு இல்லை. எங்கு வேண்டுமானாலும், அவர் போகலாம்; வரலாம். ஆனால், நகிப் இப்போதைக்கு அவர் வீட்டுக்குள்ளேயே தங்கியிருக்க வேண்டும். ஆனால் நகிப் நாட்டை விட்டு வெளியேறமாட்டார் என்றே நம்புகிறேன்."

சிரியா ஜனாதிபதி நாட்டை விட்டு ஓடி விட்டார்?

—(:)—

லெபனானில் தஞ்சம் புகுந்துள்ளாராம்!

பெய்ரூத், பிப். 26—

சிரியா ஜனாதிபதி சிசாக்லியைப் விரட்டிய இராணுவப் புரட்சியின் தலைவர் காப்டன் அப்துன் 24-வயது இளைஞராவர். ஒரு மாதத்திற்கு முன்புதான் ஜனாதிபதி சிசாக்லி பதவி உயர்வு அளித்தாராம்!

சிசாக்லி தம் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, லெபனானுக்கு வெளியேறிவிட்டார்.

சவூதி அரேபியாவில் தஞ்சம் புகுவதற்கு மன்னர் சவூதிடம் சிசாக்லி அனுமதி கேட்டுள்ளார்.

பார்லிமெண்டின் பல உறுப்பினர்களும், அரபு விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும், லெபனானுக்கு ஓடிவிட்டார்கள். அதேபோல, முன்பு லெபனானில் தஞ்சம் புகுந்திருந்த பழைய எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்போது சிரியாவுக்குத் திரும்புகின்றனர்.

சிரியா பார்லிமெண்டின் சபாநாயகர் டாக்டர் காஸ்பாரி, இரண்டு மாதத்திற்குள் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கப்படும் வரையில், தாமே ஜனாதிபதி பதவியை ஏற்றிருப்பதாக அறிவித்துள்ளார்.

3 வருடத்தில்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிக்க வேண்டும் என்று செய்யப்பட்டுள்ள சிபாரிசே போதுமானதாகும். இத்தகைய அதிகாரிகளின் நியமன எண்ணிக்கைக் கூடுவது, பிரத்யட்ச உலகத்தில் இல்லாத மாணவர்களை பள்ளிக்குள் கொண்டு வந்து சேர்க்க ஒருக்காலும் உதவாது.

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 20-ந் தேதி முதலமைச்சர் கோழிக்கோடு சென்றிருந்த பொழுது, அவரிடம் நேரில் மனு ஒன்று கொடுக்கப்பட்டது. ஆரம்ப ஆசிரியர்கள் அடிப்படை சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்றும், புதிய திட்டத்தில் உள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டி பரிகாரம் செய்ய வேண்டும் என்றும் அம்மனுவில் விளக்கப்பட்டு இருந்த தாம். அதற்கு சர்க்கார் இதுவரையில் பரிகாரம் எதுவும் தேடாமல் இருந்துவிடவே, வரவு-செலவு திட்டம் சமர்ப்பிக்கும் இந்த நேரத்திலாவது தங்கள் கோரிக்கையை சர்க்காருக்கு நினைவூட்டினால் ஏதாவது பயன் ஏற்படாதா என்ற நம்பிக்கை யிலேயே தாங்கள் சென்னைக்கு வந்து, முதல் அமைச்சரை சந்தித்து மீண்டும் ஒரு மனு கொடுத்ததாக மலபார் ஆசிரியர் தூதுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

தூதுக் குழுவில் 30 ஆசிரியர்கள் இருந்தனர். அவர்கள் தங்கள் கோரிக்கைகளைக் கொண்ட அட்டைகளைத் தாங்கிக்கொண்டு இருந்தனர். அவ்வட்டைகளில் 'புதிய கல்வித் திட்டம் கலைக்குதவாதது,' 'அடிப்படை சம்பளம் ரூ 50 ஆக உயர்த்துக' என்பவை இரண்டும் முக்கியமானதாகும்.

'தமிழ் நாட்டு ராஜாஜி புகுத்திய கல்வித் திட்டம் மலபாருக்கு வேண்டாம்' என்றும் சட்டசபை முன் முழக்கமிட்டனர் என்றும் சொல்லப்படுகிறது.

விமான விபத்து—நால்வர் பலி!

புதுடில்லி, பிப் 25—

இந்திய ஏர் லைன் கார்ப்பரேஷனுடைய டகோடா விமானமொன்று பரிசோதனைக்காகப் பறந்து செல்லும் பொழுது யமுனை பாலத்தின் அருகே விழுந்ததினால் 4 சிப்பந்திகள் இறந்ததாகக் கூறப்படுகிறது. விமானம் முழுவதும் நொறுங்கி விட்டது. இறந்தோரின் உடல்கள் துண்டு துண்டுகளாய்ச் சிதறிக் கிடந்தன.

விமானத்தின் முன்பக்கம் 7-அடி ஆழம் பூமியில் பதிந்திருந்தது; விமானியின் பிரேதம் தோண்டி எடுக்க வேண்டியதாயிருந்தது.

குறள் வகுப்பு

செம்பியம் 118, மார்க்கட் தெரு, ஜமால் மொகைதீன் மாடியில் ஞாயிறு காலை 10—11-வரை 'கல்வி—கல்லாமை' எனும் அதிகாரங்கள், தோழர் மாணிக்கனாரால் நடைபெறும்.

வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகம்

28—2—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு பென்ஷனர் லைன் மைதானத்தில், தோழர் டி. வி. சுந்தரமூர்த்தி தலைமையில் 12-வது ஆண்டு நிறைவு விழா தோழர் கே. சுமராஜ். எம். பி, தலைமையில் நடைபெறும். தோழர்கள் குத்தூசி என் குருசாமி, எம் கே. டி. சுப்ரமணியம் பி. வி. முத்துசாமி ஆகியோர் கலந்து கொள்வர்.

வேலூருக்கு

(சேலம்)

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை

வருகை

★

2—3—54 மாலை 6 மணிக்கு, வ. உ. சி. திடலில், தோழர் கே. சிவப்பிரகாசம் தலைமையில், தோழர் அண்ணாதுரை அவர்களுக்கு வரவேற்பும், பொதுக் கூட்டமும் நடைபெறும். தோழர்கள் அ. பொன்னம்பலனார், இரா. சண்முகம், பி. ஏ., ஆகியோர் பேசுவர்.

அன்று மாலை 3 மணியிலிருந்து 4 மணி வரை, வேலூர் பஞ்சாயத்து போர்டு, தோழர் அண்ணாதுரை அவர்களுக்கு வரவேற்பு அளிக்கும்.

குறிப்பு:—அன்று மாலை 5 மணிக்கு, குதிரை, சைக்கிள், கார், கால்நடையுடன் மாபெரும் ஊர்வலம் பொத்தனூரிலிருந்து புறப்பட்டு, வேலூர் பொதுக் கூட்ட மைதானம் வந்தடையும். அந்தக்குடி தோழர் ஜி அப்பாசாமி கையில் நெருப்பை அள்ளிக் கொண்டு ஊர்வலத்தில் நடந்து செல்லுவார். தடி விளையாட்டும் நடைபெறும், என்று வேலூர் (சேலம்) தி. மு கழகச் செயலாளர் வி. ஏ. ராமநாதன் அறிவிக்கிறார்.

★

மேட்டூருக்கு..

1—3-54 திங்கள் மாலை 7 மணிக்கு, மேட்டூர் போதஜன சேவா சங்க மைதானத்தில், தோழர்கள் அண்ணாதுரை, கண்ணதாசன் ஆகியோர் பேசுவர்.

நடக்க இருப்பவை

திண்டுக்கல் நகர தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

28—2—54 ஞாயிறு காலை 10 மணிக்கு, திண்டுக்கல் நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுசமயம் புதிய ஆண்டிற்கு செயற்குழு உறுப்பினர் தேர்தல் உதவி செயலாளர் எஸ். பி. தாண்டவன் தலைமையில் நடைபெறும். உறுப்பினர் அனைவரும் தவறாது வருகை தர வேண்டுகிறேன் என்று செயலாளர் க. வே. விக்ரமாதித்தராசன் அறிவிக்கிறார்.

தோழர் க. அன்பழகன் சொற்பொழிவுகள்

நாமக்கல் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழா 28—2—54 மாலை 4-30 மணிக்கு நடைபெறும். டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் தலைமை வகிப்பார். தோழர் க. அன்பழகன் விழாச் சொற்பொழிவாற்றுவார்.

தஞ்சை அரசினர் ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரியின் ஆண்டு விழா 1—3—54 திங்கள் மாலை நடைபெறும். தோழர் க. அன்பழகன் விழாச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

பெரம்பூர் திருவள்ளுவர் படிப்பகமுதலாண்டுவிழா

28—2—54 மாலை 6 மணிக்கு நெ. 8 ஜோசப் பிரான்ஸிஸ் தெருவில் திருவள்ளுவர் படிப்பக முதலாண்டு விழா தோ. அர்ச்சுனனார் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் கே அப்பாதுரை, கோகுல்கிருஷ்ணன், எம். இளஞ்செழியன், முகவை-இராசமாணிக்கம் பேசுவார்கள்.

மார்ச் 3உ வெளிவருகிறது!

மனோகரா (மு. கருணாநிதி)

திரைக் கதை வசன புத்தகம்

விலை எட்டணா — விற்பனைக் கழிவு 40%

"முரசொலி" பதிப்பகம்,

1/1, ஜக்ரியா காலனி 2-ம் தெரு,

சென்னை — 24.

கழகக் கூட்டம்

✶

தர்மபுரி

1—3—54 மாலை 5 மணிக்கு

இடம்: தீர்த்தகிரியார் மைதானம்

தலைவர்: எம். இராமசாமி

பேசுபவர்:

சி. என். அண்ணாதுரை

வேலையில்லாத...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த வரிகளில் மில் துணிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரி பொது மக்களை மிகவும் பாதிக்கக்கூடியது.

மில் துணி விற்பனையில் ஏற்கெனவே உள்ள விற்பனை வரியைத் தவிர புதிதாக ரூபாய்க்கு 0—1—3 விதம் விதிக்கப்பட்டது.

வரிகளின் விவரம்:—

(1) 500-க்கு மேல் வரி செலுத்துகிற பட்டாதாரிக்கு நிலவரி உயர்த்தப்படுகிறது.

(2) காபி, தேயிலை, ரப்பர் ஏலக்காய் தோட்டங்களுக்கு நில வருமான வரி போடப்படுகிறது,

(3) புதிய நீர்ப்பாசன நிலங்களின் அபிவிருத்தி வரி போடப்படுகிறது

(4) கோர்ட்டுக் கட்டணங்கள் அதிகரிப்பு.

(5) தங்கம், வெள்ளி, (புஷ்பராகம்) கற்கள் முதலியவைகளுக்கு விற்பனை வரி அதிகரிக்கப்படும்,

(6) மில் துணிகளுக்கு ரூபாய்க்கு 0—1—3 விதம் அதிகப்படியான விற்பனை வரி—ஏற்கனவே மில் துணி ரூபாய்க்கு 0—0—9 விதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. அதிகப்படியாக விதிக்கப்படும் புதிய விற்பனை வரியையும் சேர்த்தால் ரூபாய்க்கு 2 அணா விதம் விற்பனை வரி வசூலிக்கப்படும்.

அதே சமயத்தில் கீழ்க்கண்டவாறு வரிச் சலுகைகளும் செய்யப்படுமெனச் சொல்லப்படுகிறது:—

மீன், காய்கறி, பழம், முட்டை, இறைச்சி இவைகளுக்கு விற்பனை வரி கிடையாது.

கைத்தறித் துணி மீதுள்ள விற்பனை வரியும் ரத்து செய்யப்படும்.

சென்னை சர்க்கார் புதிய வரி விதிப்பதோடு, ரூ 11 கோடி கடனும் கேட்குமென்று நிதி மந்திரி அறிவித்தார்.

ரத்து செய்யாதே!

கர்னூல், பிப். 26—

மதுவிலக்கை ரத்து செய்யக் கூடாதென்றும், அதைத் தீவிரமாக அமுல் செய்யவேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக ஆந்திர பிரதேச காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியும், சட்ட சபை காங்கிரஸ் கட்சியும் முடிவு செய்தன.

நீர்ப்பாசன — திட்டங்கள்

சென்னை, பிப். 26—

1954—55 வரவு — செலவில் நீர்ப்பாசன முதலீட்டுச் செலவு ரூ. 6,70,90,200 கீழ்க்கண்டபடி செலவிடப்படும்:—

ஆரணியாறு	— ரூ. 31,36,000
மேட்டூர் கால்வாய்	,, 81,90,300
மலம்புழா	— ,, 77,04,500
மணிமுத்தாறு	,, 1,58,33 600
வல்லயாறு	— ,, 51,98 800
மங்களம்	— ,, 21,78 400
கீழ்பவானி	— ,, 8 60,800
அமராவதி	— ,, 46,34,800
வைகை	— ,, 36,60,200

✶

மராமத்து விஸ்தரிப்பு திட்டங்கள்

ஏற்கெனவே உள்ள நீர்ப்பாசனங்களையும், போக்குவரத்து கால்வாய்களை பராமரிக்கவும், விஸ்தரிக்கவும் 1954—55 வரவு-செலவில் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ 2,79 45 600.

காவேரி டெல்டா	ரூ 16,66,000
கீழ்கொள்ளிட அணைத் திட்டம்	,, 2,25,000
காவேரி மேட்டூர் திட்டம்—சேலம்	,, 1,58,000
,, தஞ்சைக்கு	,, 5,95,000
பெரியாறு திட்டம்	,, 2,30,900
கட்டளை திட்டம்	,, 1,30,000
காளிங்கராயன் வாய்க்காலுக்கு	,, 78,000
செய்யாறு அணைக்கு	,, 65,000
பாலாறு அணைக்கு	,, 1,30,100
திருக்கோயிலூர் அணைக்கு	,, 63,000
வைகுண்டம் அணைக்கு	90,000
சேத்தியாத் தோப்பு	55,000

இன்னும் பல குறைந்த திட்டங்கள் உண்டு.

விசயராகவன்-ராசம்மாள் திருமணம்

8—2—54ல், தோழர் மா. வெங்கடாசலம் தலைமையில், பொள்ளாச்சி தி மு கழகச் செயலாளர் தோழர் ம. விசயராகவன்—தோழியர் கே. ராசம்மாளுக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. 'திருமணம்' என்பது பற்றி தோழர்கள் மா. வெங்கடாசலம், அ ச. பாலு ரூ. க கிருஷ்ணசாமி ஆகியோர் பேசினர் நகர தி மு. க., திரு. வி. க. மன்றம், மற்றும் பல தோழர்கள் வாழ்த்திதழ்கள் வாசித்து அளித்தனர். இயக்கத் தோழர்களும், உறவினர்களும் பல பரிசுகள் வழங்கினர்.

தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரனார் அவர்களிடம் மணமக்கள் சார்பில் அத்தக்குடி நிதிக்கு ரூ 5-ம், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5-ம், கொடுக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.